பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 11 2024 **FRIDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் நீலகிரி மாவட்டம், உதகையில் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த மகளிர் சுயஉதவி குழுவினருடன் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இன்று கலந்துரையாடவுள்ளார்.

2. தீவிரவாதம், ஊடுருவல், போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்ற செயல்களுக்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பெரும் வெற்றியடைந்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. இலங்கை கடற்படையினரால் கடந்த ஆகஸ்ட் மாதம் சிறை பிடிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 12 மீனவர்களை அந்நாட்டு அரசு விடுவித்துள்ளது.

4. மணிப்பூர் மாநிலத்தில் அனைத்து பள்ளி, கல்லூரிகளும் இன்று முதல் மீண்டும் செயல்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

5. சையத் முஸ்தாக் அலி கோப்பைக்கான டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில், தமிழக அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

>>>><<<<

தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இன்று நீலகிரி மாவட்டம், உதகையில் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த மகளிர் சுயஉதவி குழுவினரை இன்று சந்தித்து பேசவுள்ளார்.

அத்துடன், பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்களும் குடியரசுத்தலைவரை சந்தித்து பேசவுள்ளனர்.

>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஒடிசாவில் இன்று முதல் மூன்றுநாள் பயணம் மேற்கொள்கிறார்.

தலைநகர் புவனேஸ்வரில் நடைபெறும் காவல்துறை தலைவர்கள் மற்றும் காவல்துறை இயக்குநர்கள் மாநாட்டில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் காவல்துறை உயரதிகாரிகள், மத்திய ரிசர்வ் காவல்படைட், தேசிய பாதுகாப்புப் படை, புலனாய்வுப் பிரிவு, சிறப்பு காவல்படையைச் சேர்ந்த உயரதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் உள்ளிட்டோரும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

உள்நாட்டு பாதுகாப்பு, இணைய குற்றங்கள், மாவோயிஸ்ட் விவகாரம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் ஏற்படும் சவால்கள், ட்ரோன்களால் ஏற்படும் அச்சுறுத்தல்கள், தீவிரவாதத்தை எதிர்கொள்வது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

தீவிரவாதம், ஊடுருவல், போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்ற செயல்களுக்கு எதிராக கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பெரும் வெற்றியடைந்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

முஸோரியில் லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், மத்தியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் கொள்கைகளுக்கு நல்ல பலன்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இன்னும் ஓராண்டில் இடதுசாரி தீவிரவாதம் முற்றிலும் அகற்றப்பட்டு விடும் என்று அவர் தெரிவித்தார்.

உலக நாடுகளின் நீதிமுறையில் நமது நாட்டின் நீதி முறை நவீனமிக்கது என்று திரு. அமித் ஷா கூறினார்.

>>>><<<<

மஹாராஷ்ட்ராவில் புதிய அரசு அமைப்பது தொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை, அம்மாநில ஷிண்டே பிரிவைச் சேர்ந்த சிவசேனா கட்சித் தலைவர் திரு. ஏக்நாத் ஷிண்டே, பிஜேபியைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ், தேசியவாத காங்கிரஸின் திரு. அஜித் பவார் ஆகியோர் நேற்று புதுதில்லியில் சந்தித்து விவாதித்தனர்.

இதில், மத்திய அமைச்சரும், பிஜேபி தலைவருமான திரு. ஜெ.பி. நட்டா கலந்து கொண்டார்.

>>>><<<<

புதிதாக அமைக்கப்பட்டுள்ள ராமேஸ்வரம் - பாம்பன் ரயில் பாலம் தொடர்பாக தென்மண்டல ரயில்வே பாதுகாப்பு ஆணையர் அளித்த அறிக்கையை ஆய்வு செய்வதற்காக, ரயில்வே அமைச்சகம் குழு ஒன்றை அமைத்துள்ளது.

ரயில்வே வாரிய முதன்மை செயல் இயக்குநர் திரு. ரவீந்திரகுமார் கோயல் தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு, தமது அறிக்கையை 45 நாட்களுக்குள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பாம்பன் ரயில் பாலம் சர்வதேச தரத்தில் தனித்தன்மையுடன் அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

இப்பாலத்தின் வடிவமைப்பை சென்னை ஐ.ஐ.டி சோதனை செய்து, தெற்கு ரயில்வே ஒப்புதல் வழங்கியுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

சிறந்த கட்டுமான நடைமுறைகளுடனும், வடிவமைப்புடனும் இந்த பாலம் கட்டடப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சம் கூறியுள்ளது.

>>>><<<<

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநிலச் செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சியாமிளி ராஜ்குமாருடன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் கடந்த ஆகஸ்ட் மாதம் சிறை பிடிக்கப்பட்ட, தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளத்தைச் சேர்ந்த 22 மீனவர்களில் 12 பேரை அந்நாட்டு அரசு விடுவித்துள்ளது.

அவர்கள் இன்று மாலை சென்னை வந்தடைவார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

சுயசார்பு மற்றும் உள்நாட்டு ராணுவ தளவாடங்கள் உற்பத்தித் திறன் ஆகியவை அமைதிக்கு அடித்தளமாக திகழ்வதாக ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பாதுகாப்புத் துறையில் இந்தியா, சுயசார்பை எட்டியுள்ளதாக கூறினார்.

அரசு மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்தங்கள் பற்றி குறிப்பிட்ட ஜெனரல் அனில் சௌஹான், பாதுகாப்பு தொழில்துறையில் தனியார் துறையினர் மற்றும் கூட்டாண்மையினர் அனுமதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

>>>><<<<

மணிப்பூர் மாநிலத்தில் அனைத்து பள்ளி, கல்லூரிகளும் இன்று முதல் மீண்டும் செயல்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

முன்னதாக, **Jiribam** மாவட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதை அடுத்து சில மாவட்டங்களில் வன்முறை சம்பவம் நிகழ்ந்ததால், கடந்த 16ஆம் தேதி முதல் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மணிப்பூர் மாநிலத்தின் சில மாவட்டங்களில் இணையதள சேவைக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து நீடிக்கிறது.

>>>><<<<

ஆள்கடத்தல், இணையதள குற்றங்கள் தொடர்பாக ஆறு மாநிலங்களில் உள்ள 22 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை நேற்று சோதனை நடத்தியது.

பீகார், உத்தரபிரதேசம், மத்தியப்பிரதேசம், தில்லி, மஹாராஷ்ட்ரா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் இந்த சோதனை நடைபெற்றது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வேலைவாங்கித் தருவதாக இந்திய இளைஞர்களை கடத்தியது தொடர்பாக 17 இடங்களில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

இந்த சோதனையின்போது, பல்வேறு மின்னணு உபகரணங்கள், நிதி ஆவணங்கள், சொத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அந்த முகமை தெரிவித்துள்ளது.

>>>><<<<

தேசிய அஞ்சல்துறை கண்காட்சி பீகார் மாநிலம், பாட்னாவில் நேற்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியை அம்மாநில ஆளுநர் திரு. கஜேந்திர விஸ்வநாத் தொடங்கி வைத்தார்.

பீகார் மாநிலத்தின் அஞ்சல் துறை கலாச்சாரத்தின் பாரம்பரிய வரலாற்றை அடிப்படையாக கொண்டு இந்த கண்காட்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர், தபால்தலைகள் குறித்த வரலாற்றை எதிர்கால தலைமுறையினருக்கு விளக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நமது பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் வரலாற்றை ஒருங்கிணைக்க தபால்தலைகள் முக்கிய கருவியாக உள்ளதாக திரு. கஜேந்திர விஸ்வநாத் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 150க்கும் மேற்பட்ட தபால்தலை சேகரிப்பாளர்கள் பங்கேற்றுள்ளனர். 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தபால்தலைகள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

>>>><<<<

வங்கக்கடலில் நிலைகொண்டு ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடமேற்கு நோக்கி நகர்ந்து, இன்று மாலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில பகுதிகளில் கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

கனமழை எச்சரிக்கையை அடுத்து, தமிழகத்தில் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கும், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரப்பிரதேசத்தின் தெற்கு கடலோரப் பகுதிகள், ஏனாம் மற்றும் ராயலசீமா பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், பீகார், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடுத்த இரண்டு, மூன்று நாட்களுக்கு காலை நேரங்களில் பனிமூட்டம் காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

மேற்குவங்கம் மற்றும் ஒடிசாவில் மூன்று நாட்களுக்கு வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸ்வரை குறையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

சையத் முஸ்தாக் அலி கோப்பைக்கான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், தமிழக அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

இந்தூரில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்குகிறது.

>>>><<<<

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில், இந்தியா 3-2 என்ற கோல்கணக்கில் ஜப்பானை வென்றது.

மஸ்கட்டில் நடைபெற்ற இப்போட்டியில் இந்திய வீரர்கள் **Thockchom Kingson Singh, Rohit, Araijeet Singh** ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

இந்தியா தனது அடுத்த ஆட்டத்தில் நாளை சீன தைபே-யை எதிர்கொள்கிறது.

>>>><<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி, ஐக்கிய அரபு எமிரேட்டில் இன்று தொடங்குகிறது.

இதில் நேபாளம் - இலங்கை அணியை எதிர்கொள்கிறது.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் நாளை பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

>>>><<<<

**Willingdon Indian Racketlon** ஓப்பன் போட்டி இன்று மும்பையில் தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் ஆதர்ஸ் நாராயணசாமி, சித்தார்த் நண்டால் உள்ளிட்ட 10 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

தற்போதைய ஆடவர் பிரிவு உலக சாம்பியன் இங்கிலாந்தைச் சேர்ந்த **Luke Griffith,** மகளிர் பிரிவு உலக சாம்பியன் டென்மார்க்கைச் சேர்ந்த **Stine Jacobsen** ஆகியோரும் இப்போட்டியில் கலந்து கொள்கின்றனர்.

**Racketlon** என்பது டேபிள் டென்னிஸ், பேட்மிண்டன், ஸ்குவாஷ் மற்றும் டென்னிஸ் போட்டிகளை கொண்டதாகும்.

>>>><<<<

புரோ கபடி லீக் போட்டியில், உத்தரபிரதேசம் - ஜெய்ப்பூர் அணியையும், தெலுகு அணி – மும்பை அணியையும் வென்றன.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் தமிழக அணி – ஹரியானாவையும், குஜராத் அணி – புனே-யையும் எதிர்கொள்கின்றன.

>>>><<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் கோவா அணி 1-0 என்ற கோல்கணக்கில் கேரளாவை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்கால் அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

>>>>END<<<<